
பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 24 புதன்கிழமை 07.05.2025 கதிர் 179

## இது ரகசியம் அல்ல!



இந்த உள்ளாட்சித் தேர்தல் எதை நிரூபித்ததோ இல்லையோ சுமந்திரனின் தீர்க்கதரிசனம் யதார்த்தமானது, அறிவுபூர்வமானது என்பதை ஐயந்திரிபுற ☞ 2

# நாடு அநுரவேோடு தமிழர் தனியாக

## மீண்டும் பிளவுண்டது இலங்கை மீண்டும் வாகை சூடியது தமிழ் அரசு

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்ந்து வெளியாகி வரும் நிலையில் வடக்கு கிழக்கு தவிர்ந்த இலங்கையின் பெரும்பாலான சபைகளை ஆளும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. தமிழர் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் நாடாளுமன்றத் தேர்தலைப் போன்று தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு கிடைக்கவில்லை. அது படுதோல்வியடைந்துள்ளது. வடக்குகிழக்கில் தமிழ்அரசுக் கட்சியே கோலோச்சியுள்ளது. அது போட்டியிட்ட அனேகமாக அனைத்துச் சபைகளிலும் வெற்றியீட்டியுள்ளது. ஓரிரு சபைகளில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ☞ 2

## மகிந்த, கோட்டா, மைத்திரி நேற்று வாக்களிக்கவில்லை



முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் நேற்று வாக்களிக்கவில்லை. அனைவரது கவனத்தையும் இது ஈர்த்துள்ளது.

மகிந்த ராஜபக்ச உடல்நலக் குறைவு காரணமாக வாக்களிக்கச் செல்லவில்லை என்று அவரது அலுவலக அதிகாரி ஒருவர் கூறினார். சமீபத்தில் அவருக்கு முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் நேற்று வேறு சில தனிப்பட்ட காரணங்களால் வாக்களிக்கச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும், முன்னாள் ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கே ஆகியோர் நேற்று வாக்களித்தனர்.

## தேர்தல் வாக்களிப்பு வீதம் 60 2018ஐவிட 10 சதவீதம் வீழ்ச்சி

2024ஆம் ஆண்டு தேருநர் இடாப்பின் கூட்டிணைக்கப்பட்ட பெயர் பட்டியலுக்கமைய இம்முறை 1 கோடி 71 லட்சம் 56 ஆயிரத்து 338 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் இம்முறை 60 சதவீதம் அளவில் வாக்குகள் பதிவாகியிருந்தன. 2018.02.10 ஆம் திகதியன்று நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 70 சதவீத வாக்களிப்பு பதிவாகியிருந்தது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ☞ 2

## தேர்தல் வெற்றியை அமைதியாக கொண்டாட ஜனாதிபதி வலியுறுத்து

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலின் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடியதை போன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வெற்றியை நாட்டு மக்கள் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். நாகரீகமான சிறந்த அரசியல் கலாச்சாரத்தை அனைவரும் பாதுகாக்கவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மருதானை, பஞ்சிகாவத்தை, அபேசிங்கராம வாக்களிப்பு மத்திய நிலையத்தில் நேற்று வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சிறந்த முறையில் வெற்றிப்பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. ஜனநாயக ரீதியாக அமைதியான முறையில் இந்த தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் சிறந்த முறையில் நடத்தப்பட்டது. நாட்டு மக்கள் அமைதியான முறையில் வெற்றியை கொண்டாடினார்கள். இதுவே பெரும் வெற்றியாகும்.

தேர்தலின் வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடும் கலாச்சாரம் தோற்றம் பெற்றுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெற்றியையும் அமைதியான முறையில் கொண்டாட வேண்டும். சிறந்த அரசியல் கலாசாரத்தை அனைவரும்

## மக்கள் எடுக்கும் முடிவுகளுக்கு சலரும் மதிப்பளிக்கவேண்டும்

### சஜித் பிரேமதாச அழைப்பு

சுதந்திரமானதும் நியாயமானதுமான ஜனநாயகம்மிக்க தேர்தலுக்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும். மக்கள் எடுக்கும் முடிவுக்கு சகலரும் மதிப்பளிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுக் கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று செவ்வாய்கிழமை இராஜகிரிய, ☞ 2

## தேர்தல் விதிகளை பட்டவர்த்தனமாக மீறினார் பிரதமர் ஹரினி அமரசூரிய

### தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் குற்றச்சாட்டு

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பரப்புரைகள் முடிவடைந்ததன் பின்னரான அமைதிக் காலத்தை மீறிச்செயற்படுமாறு பிரதமர் ஹரினி அமரசூரிய கூறியமை வெறுமனே தேர்தல் வழிகாட்டல்களை மீறும் செயல் மாத்திரம் அல்ல. மாறாக அது நியாயமான தேர்தல் செயன்முறையின் அடிப்படையைத் தகர்க்கும் செயலாகும் என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கடும் விசனம் வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியினால் கடந்த 3 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் ஹரினி அமரசூரிய, "நாம் இன்னும் 4 மணித்தியாலங்களில் அமைதியாவோம். ஆனால் நீங்கள் அமைதியடையத் தேவையில்லை. தொலைபேசி அழைப்பொன்றை ஏற்படுத்தி அல்லது வீதியில் சென்றுவரும்போது ஏதேனும் வாசகங்களைக்கூறி சுமுகமாக வேலையைச் செய்துகொள்ளமுடியும்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமர் அவரது உரையில் குறிப்பிட்ட 4 மணிநேரத்தில் தேர்தல் பரப்புரைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அமைதிக்காலம் நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இவ்வாறானதொரு ☞ 2



## தேர்தல் விதியை மீறும் நோக்கம் இல்லையாம்

### இப்படி பிரதமர் விளக்கமளிப்பு

தேர்தல்கள் சட்டத்தை மீற வேண்டும் என்ற நோக்கம் எனக்கிலை.'எமது பரப்புரை நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக முடிவுறுத்த வேண்டும்' என்றே குறிப்பிட்டேன். இவ்விடயம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானத்துக்கு கட்டுப்படுவேன், அதற்கு கௌரவமளிப்பேன் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். ☞ 5

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

நிரூபித்துள்ளது. ஏனெனில் இன்று வடக்கில் பல சபைகளிலும் தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றிருந்தாலும் ஆட்சியமைக்கப் பல சபைகளில் அதற்கு மற்றொரு கட்சியின் துணை தேவையாக இருக்கின்றது. அதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தற்போது ஒரு உறுதுணையாக பெரும்பாலும் அனைத்துச் சபைகளிலும் உயர்ந்து நிற்கின்றது.

இதைத்தான் 2023 தேர்தலின்போதும் சுமந்திரன் எடுத்துச் சொன்னார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தனியே போட்டியிடுவோம் அதன்பின்னர் அனைவரும் சேர்ந்து கூட்டமைப்பாக ஆட்சியமைப்போம் என்றார் அவர்.

அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற மாதிரி இந்த முடிவு முதலில் ரெலோவிற்கு பயத்தை ஏற்படுத்தியது. பெரும் மக்கள் ஆதரவு இல்லாத தம்மையும் புளொட்டையும் கழற்றிவிடுவதற்கான தமிழ் அரசுக் கட்சியின் முன்முயற்சி இதுஎன்றுஎண்ணி, அவசரப்பட்ட சிலர் தலைமைகளின் காதுகளில் வேதம் ஓத, அந்தச் சாத்தான்கள் ஓதியதை வேதம் என்று நினைத்துக்கொண்டு எதிர்காலம் பற்றிய எந்த யதார்த்தபூர்வமான அறிவும் அனுபவமும் இன்றி எல்லாவற்றையும் போட்டடித்துக் குளப்பியடித்தன ரெலோவும் புளொட்டும்.

இப்போது நாங்கள் தமிழ் அரசுடன் சேர்ந்து ஆட்சியமைப்போம் என்று பல்லிளித்துக்கொண்டு நிற்கிறார்கள். இதை அப்போதே ஒழுங்காகப் புரிந்துகொண்டு செயற்பட்டிருந்தால், நாடாளுமன்றத் தேர்தலிலும் என்பிபியிடம் தோற்றிருக்கத் தேவையில்லை. பலமாக உருப்படியான வெற்றியைப் பதிவு செய்திருக்க முடியும். இப்போது தாங்கள் ஏதே பெரிய சாதனை செய்துவிட்டவர்களைப் போன்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மகிழ்ச்சியடைவதைப்பார்க்கும்போது இவர்கள் உண்மையில் அறிவுள்ள மனிதர்கள்தானா என்றுதான் கேட்கத் தோன்றுகின்றது.

என்ன இருந்தாலும் அவர்கள் செய்ததில் ஒரு நன்மை இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. பல எலிகூடி புற்றெடுக்காது என்பதைப் போலவும் பல சமையல்காரர்கள் சேர்ந்தால் சூப் ருசிக்காது என்பதைப் போலவும் கூட்டணி என்ற பெயரில் பல கட்சிகள் கிடந்து குழப்பியடிக்காமல் ஒரு கட்சியின் உறுதியான தலைமையாக தமிழ் அரசுக் கட்சி வடக்கு கிழக்கில் மேற்கிளம்பி வருவதற்கு இவர்கள்தான் அடித்தளமிட்டு, பாதை அமைத்துக் கொடுத்தார்கள். என்ன அதன் பக்க விளைவாக ஒரு நாடாளுமன்றத் தேர்தலை இழக்க வேண்டியதாகிப் போய்விட்டது என்பதுதான் கவலை.

எப்போதுமே தமிழர்கள் ஒற்றுமையற்றவர்கள். அவர்களை ஒரே அணியில் திரட்டுபவர்கள் எதிரிகள்தான். இந்தத் தடவை அந்த எதிரியாக என்பிபியினர் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு இது மிகப் பெரும் தோல்வி. அவர்களால் வடக்கு கிழக்கில் ஒரு சபையைகக்கூடக் கைப்பற்ற முடியவில்லை. நானாட்டானில் அதிக ஆசனங்களைப் பெற்றபோதும் அங்கும் ஆட்சியமைக்க முடியாது அவர்களால். நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் வென்றதன் மூலம் இலங்கை ஒற்றுமைப்பட்டுவிட்டது என்று குரல் கொடுத்தவர்கள், அதை முன்வைத்து தமிழ் மக்களின் அரசியல் வேணவாவைப் புறந்தள்ளி, கால்களில் போட்டு மிதித்தவர்கள் இப்போது இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் இலங்கை மீண்டும் பிளவுபட்டுள்ளது என்பதையும் இனி பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும் செய்வார்களா?

உள்ளாட்சித் தேர்தலையொட்டிய இன்னும்பல சுவாரஸியமான சம்பவங்கள் உள்ளன. அவை பற்றி வரும் நாட்களில் பகிர்ந்துகொள்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெற்றுள்ளது.

இன்று அதிகாலை வரையில் வெளியான முடிவுகளின்படி வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சபைகளிலும் தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் 6 ஆசனங்களுடனும் கரைச்சி பிரதேச சபையில் 20 ஆசனங்களுடனும் பூநகரிப் பிரதேச சபையில் 10 ஆசனங்களுடனும் தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இவற்றில் கரைச்சி பிரதேச சபையில் தனித்தும் மற்றைய இரு சபைகளிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அல்லது வேறு கட்சிகளின் ஆதரவுடனும் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்கும் வாய்ப்புக்கள் தெளிவாக உண்டு.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளியான முடிவுகளின்படி யாழ். மாநகர சபையில் 13 ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ளது. எனினும் இங்கு ஆட்சியமைக்க தமிழ் காங்கிரஸின் ஆதரவு அல்லது ஈபிடிபி, ஐதேக, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் ஆதரவு தமிழ் அரசுக்குத் தேவை. வல்வெட்டித்துறை நகர சபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ளது. அங்கு தமிழ் அரசுக் கட்சி 5 ஆசனங்களையும் ஈபிடிபி ஒரு ஆசனத்தையும் என்பிபி 3 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ள நிலையில் காங்கிரஸ் சிறுபான்மை ஆட்சியையே அமைக்க முடியும். சாவகச்சேரி நகர சபையில் தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் தலா 6 ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றிபெற்றுள்ளன. எனினும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவைப் பெறும் கட்சி இதில் ஆட்சி அமைக்கும் சாத்தியமுண்டு.

காரைநகர் பிரதேச சபையில் வெற்றிபெற்ற கட்சி என்று ஒன்று இல்லை. காங்கிரஸ், ஐதேக, என்பிபி, தமிழ் மக்கள் கூட்டணி, சுயேச்சை ஆகியன தலா இரு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன. தமிழ் அரசுக் கட்சி ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளன. இங்கு ஆட்சி அமைப்பது யார் என்பது பெரும் இழுபறியாகவே இருக்கப் போகிறது. நெடுந்தீவுப் பிரதேச சபையை தமிழ் அரசுக் கட்சி 6 ஆசனங்களுடன் கைப்பற்றியுள்ளது. வேலணைப் பிரதேச சபையில் 8 ஆசனங்களுடன் தமிழ் அரசுக் கட்சி வெற்றிபெற்றுள்ளது. அங்கு என்பிபி 4 ஆசனங்களை அடுத்துப் பெற்றுள்ளது. காங்கிரஸ் 2, ஈபிடிபி 3, ஐதேக 1, தமிழ் மக்கள் கூட்டணி 1, மூன்று சுயேச்சைகள் தலா 1 என்று ஆசனங்களைப் பெற்றுள்ள நிலையில் தமிழ் அரசு ஆட்சியமைக்க இரண்டு அல்லது மூன்று கட்சிகளின் ஆதரவு தேவைப்படும். வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி 11 ஆசனங்களுடன் வெற்றி பெற்றுள்ளது. வடமராட்சி தெற்கு பிரதேச சபையில் 13 ஆசனங்களுடன் தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

மன்னார் நகர சபையில் தமிழ் அரசுக் கட்சி 4 ஆசனங்களுடன் வெற்றி பெற்றிருந்தாலும் ஆட்சி அமைப்பது இழுபறியில் முடியும். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன ஆதரவளித்தால்தான் அங்கு தமிழ் அரசு ஆட்சியமைக்க முடியும். மன்னார் நகர சபையிலும் 5 ஆசனங்களுடன் தமிழ் அரசு வெற்றிபெற்றுள்ளது. எனினும் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி அல்லது முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு தேவைப்படும். நானாட்டான் பிரதேச சபையில் என்பிபி 6 ஆசனங்களுடன் வெற்றிபெற்றுள்ளது. எனினும் இங்கு 4 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள தமிழ் அரசு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (2), ஐக்கிய மக்கள் சக்தி (2), சுயேச்சை (2) ஆகியவற்றின் ஆதரவுடன் ஆட்சியமைக்க வாய்ப்பு உண்டு. மாந்தை மேற்கு பிரதேச சபையை0ல் 5 ஆசனங்களுடன் தமிழ் அரசு வெற்றி பெற்றுள்ளது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி இணைந்தால் இங்கும் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியைப் பிடிக்க முடியும்.

முல்லைத்தீவில் உள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய், புதுக்குடியிருப்பு, கரைத்துரைப்பற்று ஆகிய நான்கு சபைகளிலும் தமிழ் அரசுக் கட்சி முறையே 4, 4, 11, 7 ஆசனங்களைப் பெற்று வெற்றிபெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு தவிர மற்றைய இடங்களில் வேறு கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியமைக்கவேண்டி வரும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாமுனைப்பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி 10 ஆசனங்களுடன் வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை மாநகர சபையில் 9 ஆசனங்களுடன் தமிழ் அரசுக் கட்சி வெற்றிபெற்றுள்ளது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் சேர்ந்து (4) இங்கு தமிழ் அரசு ஆட்சியமைக்கும். வெருகல் பிரதேச சபையை 8 ஆசனங்களுடன் தமிழ் அரசு வென்றுள்ளது. அங்கு தனித்து ஆட்சியமைக்கும். சேருவில, கந்தளாய், மொறவேவா, கோமரங்கடவெல, பதவியா ஆகிய சபைகளை என்பிபி வென்றுள்ளது. திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையில் 6 ஆசனங்களுடன் தமிழ் அரசு வென்றுள்ளது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவுடன் தமிழ் அரசு இங்கு ஆட்சியமைக்க முடியும். வவுனியா வடக்கு பிரதேச சபையில் என்பிபி 6 ஆசனங்களுடன் வென்றுள்ளது. எனினும் தமிழ் அரசுக் கட்சி (5), தமிழ் காங்கிரஸ் (4), ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்ணி (3) இணைந்தால் தமிழ் அரசு ஆட்சியைப் பிடிக்க முடியும்.

இவை தவிர இன்று அதிகாலைவரை வெளியான முடிவுகளின்படி பெருபாலான சபைகளை என்பிபி கைப்பற்றியுள்ளது. சில சபைகளில் சுயேச்சைக் குழுக்கள் வெற்றிபெற்றுள்ளன.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுவேகொட விவேகாராம விகாரையில் வாக்களித்தன்பின்னர் ஊடகங்களுக்குகருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஜனநாயக ரீதியாகவும், அமைதியான முறையிலும், நீதி நியாயமாகவும்நடக்கும்எனஎதிர்பார்க்கிறோம். மக்களின் உரிமைகளை முதன்மைப்படுத்தும் சுதந்திரமான தேர்தலாக இது அமையும். சுதந்திரமாக மக்கள் தங்கள் கருத்துகளையும் விருப்பங்களையும் தெரிவிக்க சந்தர்ப்பம் கிட்ட வேண்டும். கிராமங்களினதும் நகரங்களினதும் அதிகாரத்தை யாருக்கு வழங்குவது என்பதை தீர்மானிக்க இந்நாட்டு மக்களுக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது.

மக்கள்இதனைசரியாகபயன்படுத்துவார்கள் என நான் நம்புகிறேன். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்று கிராமங்களைக் கட்டியெழுப்பி, நகரங்களைக் கட்டியெழுப்பி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் செய்தியை சரியான நேரத்தில் கொண்டு சேர்த்துள்ளோம்.

தீர்மானம் எடுக்க வேண்டியது மக்களே. எனவே, சுதந்திரமானதும்நியாயமானதுமான ஜனநாயகம்மிக்க தேர்தலுக்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும். மக்கள் எடுக்கும் முடிவுக்கு சகலரும் மதிப்பளிக்க வேண்டும். தேர்தல் சட்டங்களை மீறாமல் நடந்து கொள்ள வேண்டும். இந்த ஜனநாயகத்தை உரிய முறையில் செயல்படுத்த வேண்டும்.

## தேர்தல் வாக்களிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை போன்று மக்கள் ஆர்வமான முறையில் வாக்களிப்பதை அவதானிக்க முடியவில்லை. காலை மற்றும் பகல்வேளையில் மந்தரகமான முறையிலேயே வாக்களிப்புக்கள் காணப்பட்டன. எவ்விதமான வன்முறை மற்றும் அமைதியற்ற செயற்பாடுகள் ஏதும் பதிவாகவில்லை. சிறந்த முறையில் தேர்தல் வாக்கெடுப்பு நிறைவடைந்தது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சிறந்த முறையில் தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் இம்முறை 75,589 பேர் போட்டியிட்ட நிலையில், 2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பின் கூட்டிணைக்கப்பட்ட பெயர் பட்டியலுக்கமைய இம்முறை 17,156,338 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் இம்முறை மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 60 சதவீதம் அளவில் வாக்குகள் பதிவாகியிருந்தன. 2018.02.10 ஆம் திகதியன்று நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 70 சதவீத வாக்களிப்பு பதிவாகியிருந்தது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பாதுகாப்பு பணிகளுக்காக 65 ஆயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில், 3000 தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இம்முறை அமைதியான முறையில் வாக்கெடுப்பு இடம்பெற்றதாக தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

பதுளை தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீதம், கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் 50 சதவீதம், பொலன்னறுவை தேர்தல் மாவட்டத்தில் 53 சதவீதம், நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீதம், களுத்துறை தேர்தல் மாவட்டத்தில் 55 சதவீதம் திகாமடுல்லை தேர்தல் மாவட்டத்தில் 63 சதவீதம் , அநுராதபுரம் தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீதம் , கேகாலை தேர்தல் மாவட்டத்தில் 58 சதவீதம், மன்னார் தேர்தல் மாவட்டத்தில் 70 சதவீதம், புத்தளம் தேர்தல் மாவட்டத்தில் 55 சதவீதம், குருநாகல் தேர்தல் மாவட்டத்தில் 51 சதவீதம் , மொனராகலை தேர்தல் மாவட்டத்தில் 61 சதவீதம், இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீதம் , காலி தேர்தல் மாவட்டத்தில் 63 சதவீதம், மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் 63 சதவீதம், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 61 சதவீதம், கண்டி தேர்தல் மாவட்டத்தில் 55 சதவீதம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீதம் முல்லைத்தீவு தேர்தல் மாவட்டத்தில் 61 சதவீதம், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 68 சதவீதம், வவுனியா தேர்தல் மாவட்டத்தில் 59 சதவீதம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 56.6 சதவீதம் என்ற அடிப்படையில் வாக்களிப்பு பதிவாகியுள்ளது. இதற்கமைய நாடளாவிய ரீதியில் 60 சதவீதமளவில் வாக்களிப்பு பதிவாகியுள்ளன.

நாடளாவிய ரீதியில் 4877 உள்ளூராட்சிமன்றங்களில் அமைக்கப்பட்டிருந்த 13,759 வாக்களிப்பு மத்திய நிலையங்களின் வாக்களிப்பு பணிகள் நேற்று பிற்பகல் 4 மணியுடன் நிறைவடைந்தது. இம்முறை 5783 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்கு எண்ணும் பணிகள் நேற்று மாலை 5.30 மணியளவில் தொகுதிமட்டத்தில் ஆரம்பமாகின.

இதற்கமை அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டத்தில் தங்காலை நகர சபையின் தேர்தல் முடிவை நேற்று மாலை 6.39 மணிக்கு தேர்தல்கள் ஆணைக்குழு முதலாவதாக உத்தியோகபூர்வமாக வெளியிட்டது.

## தேர்தல் விதிகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணியில், ''கடந்த 3 ஆம் திகதி அமைதிக்காலம் நடைமுறைக்கு வருவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்காகப் பரப்புரை செய்வதைத் தொடருமாறு பிரதமர் ஹரினி அமரசூரிய ஆதரவாளர்களிடம் கோரியது தேர்தல் வழிகாட்டல்களை நேரடியாக மீறுகின்ற செயலாகும். இது குறித்து எமது அமைப்பு உத்தியோகபூர்வ முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளது'' என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி 'பிரதமர் ஹரினி அமரசூரிய பரப்புரை அமைதிக் காலத்தைப் பின்பற்றத் தேவையில்லை எனக் கூறியமை வெறுமனே தேர்தல் வழிகாட்டல்களை மீறும் செயல் மாத்திரம் அல்ல. மாறாக அது நியாயமான தேர்தல் செயன்முறையின் அடிப்படையைத் தகர்க்கும் செயலாகும்' எனவும் அந்நிலையம் கடும் விசனம் வெளியிட்டுள்ளது.

மேலும் உயர் பதவியில் உள்ள ஒருவர் தேர்தல் சட்டத்தை மீறுமாறு கோருவது வெறுமனே அரசியல் நகர்வு மாத்திரமல்ல எனவும், மாறாக அது ஒட்டுமொத்த கட்டமைப்பின் மீதான அழுத்தம் எனவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு அமைதிக்காலம் என்பது குறித்தவொரு காரணத்தின் நிமித்தமே நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், ஆகவே இச்சம்பவம் தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் அந்நிலையம் வலியுறுத்தியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# வலைப்பந்தாட்ட, எறிபந்தாட்டப் போட்டிகளில் கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி வெற்றி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி 125 ஆவது ஆண்டு நிறைவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கல்முனை வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டம் மற்றும் எறிபந்தாட்டப் போட்டிகளில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 16,18 வயதுக்கு உட்பட்ட பெண் மாணவர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள், 17,20 வயதுக்கு உட்பட்ட பெண் மாணவர்கள் மற்றும் 17 வயதுக்குட்பட்ட ஆண் மாணவர்களுக்கான எறிபந்தாட்டப் போட்டிகளில் இந்த பாடசாலையின் அணிகள் சம்பியனாக வெற்றி ஈட்டியுள்ளதோடு மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த வலைப்பந்தாட்ட மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர் திருமதி ஹயாளினி சிவாகரன் அவர்களுக்கும், பயிற்றுவிப்பாளரான சுதரிஷாந்தன் அவர்களுக்கும், எறிபந்தாட்டப் போட்டியின் பயிற்சிக்கு பொறுப்பாக இருந்த அருட். சகோ.ஏ.தேவராஜா அவர்களுக்கும் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கும் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா

# இரண்டு இளைஞர்கள் வாள்களுடன் கைது



கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட செல்வா நகர் பகுதியில் வாக்களிப்பு நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் சிறிய ரக கார் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு வாள்கள் கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு சந்தேக நபர்களையும் அவர்கள் பயன்படுத்திய காரையும் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலீசார் தெரிவித்துள்ளனர். 316



# 15 வயதேயான சிறுவன் காரணம் தெரியாது சாவு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிறுவன் ஒருவன் நள்ளிரவு 12 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் மாணவனான, அரசடி வீதி, வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த வயது 15 சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த சிறுவனுக்கு கடந்த சில வருடங்களாக சலத்துடன் புரோட்டின் வெளியேறியது. இந்நிலையில் கடந்த 20ஆம் திகதி சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவ்வாறு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நள்ளிரவு 12 மணியளவில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மரணத்திற்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில் பகுப்பாய்விற்காக உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

# வித்தியாரம் நூல் வெளியீடு



(ஜிப்ரான்)

மூதூரின் மூத்த கல்வியலாளர் ஏ.சி.எம்.மக்கீன் அதிபர் அவர்களின் கல்விச் சேவை மற்றும் சமூகப் பணிகளை பாராட்டி அப்துல் காசிம் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் மூதூர் கலாசார மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வும், 'வித்தியாரம்' சிறப்பு மலர் வெளியீட்டு விழாவும் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஏ.சி.எம்.மக்கீன் அதிபரிடம் கல்வி கற்ற மாணவர்களும், அப்துல் காசிம் நம்பிக்கை நிதியத்தின் குடும்ப அங்கத்தவர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்ததோடு, மக்கீன் அதிபர் அவர்களுக்கு பொன்னாடை, மலர் மாலை, நினைவுச் சின்னங்கள் மற்றும் அன்பளிப்புகள் வழங்கி கௌரவித்தனர்.

'வித்தியாரம்' சிறப்பு மலர் மிகக்குறுகிய காலத்தில் மலர் குழுவின் அங்கத்தவர்களான கலாபூசணம் எம்.சி.எம்.ஷெரீப், கலாபூசணம் எம்.எஸ்.அமானுல்லா மற்றும் கலாபூசணம் ஏ.எஸ்.உபைதுல்லா போன்ற மூத்த இலக்கிய ஆளுமைகளால் தொக்கப்பட்டு மூதூர் ஜே.எம்.ஐ வெளியீட்டகத்தின் பதிப்பில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு டீ.சொய்சா மகளீர் மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எம்.நிஹால் அவர்கள் வித்தியாரம் மலருக்கான பூரண அனுசரணையை அளித்தமை விசேட அம்சமாகும்.






நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மாகாண சபை தேர்தலையும் உடனடியாக நடத்தவேண்டும்

2025 மே 6 ஆம் தேதி நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல், நீண்ட கால ஒத்திவைப்புகளுக்குப் பின்னர் மக்கள் மக்களாட்சியில் தங்கள் உரிமையைப் பயன்படுத்திய ஒரு முக்கியமான நாளாகப் பதியப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டிய இந்தத் தேர்தல், அரசியல் மாற்றங்கள், நிதி பற்றாக்குறை, சட்டப்போராட்டங்கள் என பல்வேறு தடைகளால் இரண்டாண்டுகளாக பின்னோக்கி நகர்ந்தது. எனவே, இந்த தேர்தல் வெற்றிகரமாக நடந்தமை, நாட்டில் ஜனநாயகத்திற்கு மீண்டும் உயிர் வழங்கிய நிகழ்வாகும்.

உள்ளூராட்சிசபைத்தேர்தல்வெற்றிகரமாகநடைபெற்று முடிந்துள்ள இந்த வேளையில், அடுத்த கட்டமாக மாகாண சபைத் தேர்தலையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் தீவிரமாகும். கடந்த 2018 ஆம் ஆண்டில் சில மாகாணங்களில் நடந்த பின்னர், மாகாண சபைகள் முற்றிலும் செயலற்ற நிலையில் மூடப்பட்டுள்ளன. இதனால், மாகாண மட்டத்தில் நடைபெற வேண்டிய நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தும் மத்திய அரசின் கீழ் சிக்குண்டு நிற்கின்றன. இது மக்களாட்சியின் அடிப்படை ஆட்சி அமைப்பிற்கு முரணானது.

மாகாண சபைகள், 13ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும். அவை, கல்வி, காணி, ஊரக அபிவிருத்தி, விவசாயம், சுகாதாரம் போன்ற முக்கிய சேவைகளை மக்கள் அருகிலேயே கொண்டு சேர்ப்பதற்காக மட்டமான நிர்வாகம் வகிக்கின்றன. இவை வழியாக, மத்திய அரசின் பாரத்தைப் பகிர்ந்து மக்களுக்கு திறமையான சேவைகளை வழங்க முடியும். ஆனால் தற்போதைய சூழலில், மக்கள் தேவைகள், அபிலாஷைகள், திட்டங்கள் அனைத்தும் அமைச்சுப் பரிமாறுகளின் முடிவுகளுக்கே கட்டுப்பட்டு நிற்கின்றன. இத்தகைய நிலை ஒரு நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் பாய்ச்சலாகும்.

உள்ளூராட்சி தேர்தலுக்குப் பிறகு மக்கள் ஜனநாயகத்தின் பலனை அனுபவிக்கத் தொடங்கும் நேரத்தில், மாகாண சபைகள் இல்லாத நிலையைக் காண்பது மிகவும் வேதனையளிக்கிறது. மக்கள் தெரிவுச் செய்த பிரதிநிதிகளின் வாயிலாகவே ஆட்சி நடைபெறவேண்டும் என்பதே மக்கள் ஆட்சியின் நெறிமுறை. எனவே, மாகாண சபைகளுக்கும் உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இது, சிங்களம், தமிழம், முஸ்லிம் என அனைத்து சமூகங்களுக்கும் உரியதாகும். குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திக்காகவும், மக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்காகவும், மாகாண சபைத் தேர்தல் மிக முக்கியமானது. தங்களுக்குரிய பிரதேச அரசை மக்கள் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை மறுத்து வைக்க முடியாது.

தேர்தல் ஆணைக்குழுவும் அரசும், ஜனநாயகத்தின் இந்த மிக முக்கிய அங்கத்தையும் உயிர்ப்பிக்க வேண்டும். தற்போதைய அரசியல் சூழலில் இது சாத்தியமானதே. உள்ளாட்சி சபைகள் நடத்த முடிந்தால், மாகாண சபைகளும் நடத்த முடியும். தேவையான சட்ட திருத்தங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

மக்கள் அதிகாரத்தின் முழுமை மாகாண சபைகளின் மீட்டமைப்பின் வாயிலாகவே நிறைவேறும்.

# அசாதாரண காலநிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் 26 பேர் பாதிப்பு

*05 ஆம் திகதி திங்கட்கிழமை நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக யாழ்ப்பாணத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 26பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் டிக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-203 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 5 பேர் மின்னல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், ஜே-191 கிராம சேவகர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 7பேர் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.*

*சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-141 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களை சேர்ந்த ஏழுபேர் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்டுளள்ளதுடன் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்துடன் ஜே-150 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.*

*மேலும், சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-180 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஐவர் பலத்த காற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*









## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டே மிரிஹானவில் உள்ள சமுர்த்தி கட்டிடத்தின் வாக்களிப்பு மத்திய நிலையத்தில் நேற்று வாக்களித்ததன் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

அண்மையில், முதல் முறையாக எமக்கு ஆளும்தரப்பு ஆதரவுடன் உழைக்கும் மக்கள் தினத்தை கொண்டாட முடிந்தது. இந்த ஆண்டு மே தினக் கொண்டாட்டம் எமது வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான மே தினக் கொண்டாட்டமாகும். ஜனாதிபதித் தேர்தலை பார்க்கிலும் பொதுத் தேர்தலில் எங்களுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்தது, அதேபோன்று உள்ளூராட்சித் தேர்தலிலும் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று நம்புகிறேன்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்று, எங்களுக்கு கிராமங்களுக்கு அபிவிருத்தியை கொண்டு செல்ல முடியுமாக இருக்கும். உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களுக்கு மிக நெருக்கமானவை. அதனால்தான் இந்தத் தேர்தல் எங்களுக்கு மிகவும் முக்கியமானது.

குற்றவாளிகள் அரசியல் பாதுகாப்பை இழந்துள்ளதால் அவர்கள் கலவரமடைந்துள்ளனர். அவர்களின் இந்த அமைதியின்மை தான் நாட்டில் நடைபெறும் குற்றங்களுக்குக் காரணம். 'பொலிஸார் தற்போது சட்டம் ஒழுங்கைப் பேணி வருகின்றனர்'.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவே இந்த நாட்டின் ஜனாதிபதி இடைக்கால ஜனாதிபதி பதவி குறித்து பேசுபவர்கள் அரசியலமைப்பை தெளிவாக படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிகளின் பலவீனத்துக்கு நாங்கள் பொறுப்புக்கூற முடியாது. தேர்தல்கள் சட்டத்தை மீற வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை.'எமது பிரச்சார நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக முடிவுறுத்த வேண்டும்' என்றே குறிப்பிட்டேன். இவ்விடயம் குறித்து ஆணைக்குழு எடுக்கும் தீர்மானத்துக்கு கட்டுப்படுவேன், அதற்கு கௌரவமளிப்பேன்.

கடந்த காலங்களில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடப்படவில்லை. பாரதூரமான குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டன. சிறு தவறு ஏதும் நேர்ந்தால் அதனை சுட்டிக்காட்டும் அளவுக்கு மக்கள் அவதானத்துடன் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. இதுவும் சிறந்த அரசியல் மாற்றமாகும். சமூகம் ஜனநாயக அம்சங்களுடன் செயற்படுகிறது என்பதையே இது வெளிப்படுத்துகிறது என்றார்.

# மக்கள் நம்பிக்கை வீண்போகாமல் காத்திரமாகச் சேவை செய்வோம்

## நன்றி தெரிவித்து சுமந்திரன் அறிக்கை

மக்களின் நம்பிக்கை வீண்போகாமல் காத்திரமாக சேவை செய்வோம் என்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட குறிப்பில் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"தற்போது நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு வடக்கு கிழக்கில் வாக்களித்த தமிழ் மக்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றிகள். நாடாளுமன்ற தேர்தலில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பின்னடைவுக்குப் பிறகு மீண்டும் மக்களது ஆதரவைத் தமிழ்க் கட்சிகள் பெற்றுகொண்டதில் பெருமிதம்கொள்ளும் அதேவேளையில் நாம் எமது மக்களது நம்பிக்கை வீண் போகாமல் காத்திரமாக சேவை செய்வோம் என்றும் உறுதியளிக்கிறோம்" என்று அவர் அந்தக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# வாக்களிப்பதில் மக்கள் சோரவில்லை ரணில் விக்கிரமசிங்க கண்டுபிடிப்பு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுமார் 75,000 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அதன் அடிப்படையில் ஒவ்வொரு 200 வாக்காளர்களுக்கும் ஒரு வேட்பாளர் காணப்படுகின்றார். எவ்வாறிருப்பினும் மக்கள் வாக்களிப்பதில் சோர்வடையவில்லை என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்கிழமை கொழும்பு பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை தேர்தலில் சுமார் 75 000 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். எனினும் 17 மில்லியன் வாக்காளர்களே உள்ளனர். அவ்வாறெனில் 200 வாக்காளர்களுக்கு ஒரு வேட்பாளர் காணப்படுகின்றார். அந்த வகையில் வேட்பாளர்களுடன் தொடர்புடைய வாக்காளர்கள் நிச்சயம் வாக்களிப்பர்.

ஓரளவுக்கு வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். சில இடங்களில் அந்த எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. எவ்வாறிருப்பினும் மக்கள் வாக்களிப்பதில் சோர்வடையவில்லை.

மாறாக ஏனைய பகுதிகளில் வாக்களிப்பு வீதம் குறைவு எனில் அதற்கான காரணத்தை வாக்காளர்களிடமே கேட்க வேண்டும். வழக்கமாக காலையில் 9-10 வீத வாக்குப்பதிவு இருக்கும். காலையிலும் பிற்பகலிலும்தான் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வாக்களிக்கிறார்கள் - என்றார்.






# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியிடம் இழப்பீடு கேட்கும் அமைச்சர்

## அவதூறு பரப்பியதற்காக ரூ. 500 மில். தரக் கோரிக்கை

தேர்தலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார விஜேசுந்தர, தன்னைப்பற்றி அவதூறு பரப்பியமையால் அவரிடம் 500 மில்லியன் இழப்பீடு கோரியுள்ளனர் எனவும், 14 நாட்களுக்குள் அதனைச் செலுத்த தவறினால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :

கடந்த 2ஆம் திகதி அல்லது முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார விஜேசுந்தர, உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்கவை இலக்கு வைத்து குறிவைத்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டார்.

அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் பரந்தளவில் பகிரப்பட்டுள்ளதால் அமைச்சருக்கு சமூகத்தில் காணப்பட்ட நன்மதிப்பிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் நான்கு கோடியே 85 இலட்சத்துக்கு வீடு வாங்கியமை தொடர்பில் மோசடி இடம்பெற்றுள்ளதாக அவரால் தெரிவிக்கப்பட்டது.

வசந்த சமரசிங்க தற்போதைய வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சராகவும், ஊழல் எதிர்ப்பு குரல் இயக்கத்தின் தலைவராகவும், ஆளும் கட்சியில் தொழிற்சங்க ஆர்வலராகவும் பணியாற்றுகிறார். இது அமைச்சருக்கு பெரும் அவமானமாக அமைந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார விஜேசுந்தரவின் அறிக்கை தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஏனெனில் அது தேர்தலை அண்மித்த காலப்பகுதியில் வெளியிடப்பட்ட கருத்து என்பதோடு, அதற்கு பதிலளிக்க அமைச்சருக்கு நேரமும் காணப்படவில்லை.

அந்த அறிக்கையால் ஏற்பட்ட அவமானம் காரணமாக, ரோஹண பண்டார விஜேசுந்தரவுக்கு ஒரு கோரிக்கை கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய அவர் அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு 14 நாட்களுக்குள் 500 மில்லியன் ரூபாவை செலுத்துமாறும், அவர் அவ்வாறு செய்யத் தவறினால், அந்தப் பணத்தை மீட்டெடுப்பதற்காக சட்டத்தின்படி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir

# வாக்களிப்பு தினமான நேற்று மாத்திரம் மட்டு. மாவட்டத்தில் 139 விதிமீறல்கள்

## ஏழு பேர் ஆழ்கடல் சுழியோடிகளாக தெரிவு

(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு தினத்தில் மாத்திரம் 139 விதிமீறல் சம்பவங்களும் வாகரையில் ஒரு தேர்தல் வன்முறை சம்பவமும் பதிவாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜேஜே முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட அரசாங்க அதிபர் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு 12 உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்கின்ற தேர்தலில் பொதுமக்கள் மிக ஆர்வத்துடனும் அமைதியான முறையில் வாக்களித்து வருகின்றனர்.

வாக்களிப்பு நேரம் முடிவடைந்த பின்னர் பொதுமக்கள் மிகவும் அமைதியான முறையில் வீடுகளில் தங்கி இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மியான்மாரில் மீதமிருந்த இலங்கையர்களும் மீட்பு

மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீதமுள்ள 15 இலங்கையர்கள் (இதுவரை பதிவாகியுள்ளபடி) நேற்று செவ்வாய்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர். தாய்லாந்து ஆளும்தரப்புடன்ஒருங்கிணைந்துவெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் தாய்லாந்தில் உள்ள இலங்கை துதுரகம் ஆகியவற்றால் இதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மியன்மார் - தாய்லாந்து எல்லையில் உள்ள மியாவாடி பகுதியில் உள்ள மெசோத்தில் நேற்று காலை தாய்லாந்து அதிகாரிகளால் தாய்லாந்துக்கான இலங்கை துதுர் விஜயந்தி எதிரிசிங்கவிடம் 15 இலங்கையர்கள் அடங்கிய குழு ஒப்படைக்கப்பட்டது.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் மாரிஸ் சங்கியம்போங்சா மற்றும் மியன்மார் வெளியுறவு அமைச்சர் யூதான் ஸ்வே ஆகியோருக்கு இடையேயான தொடர்ச்சியான தொலைபேசி உரையாடல்களின் விளைவாக இந்தக் குழு மீட்கப்பட்டது.

சைபர் குற்ற முகாம்களில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்கும் பணியில் இராஜதந்திர ரீதியாக தலையிட்ட தாய்லாந்து துதுரகம், போக்குவரத்து வசதிகளை வழங்கிய சர்வதேச இடம்பெயர்வு அலுவலகம், பிற நலன்புரி வசதிகளை வழங்கிய அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தாய்லாந்து மற்றும் மியான்மர் அரசாங்கங்களின் பங்கை அமைச்சர் விஜித ஹேரத் பாராட்டினார்.

இதற்கு முன்னர் மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் சிக்கிய 14 இலங்கையர்கள் மார்ச் 18 ஆம் திகதியும், 27 இலங்கையர்கள் டிசம்பர் 17, 2024 அன்றும் திருப்பி அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புகலிடக் கோரிக்கைகளை மட்டுப்படுத்த பிரிட்டன் முடிவு

விசா அனுமதி வழங்கப்பட்ட காலம் முடிவடைந்ததன் பின்னரும் நாட்டில் தங்கியிருந்து புகலிடக் கோரிக்கையை முன்வைப்போரைப் பெரும்பான்மையாகக்கொண்ட நாடுகளின் பிரஜைகளால் முன்வைக்கப்படும் விசா கோரிக்கைகளை மட்டுப்படுத்துவதற்கு பிரிட்டனின் புதிய அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளைச்சேர்ந்த பிரஜைகளின் விசா கோரிக்கைகள் மேற்குறிப்பிட்டவாறான மட்டுப்பாட்டுக்கு உட்படக் கூடும் என அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் கல்விக்கான விசாமூலம் சட்டரீதியாக நாட்டுக்குள் பிரவேசிப்பவர்கள், விசா அனுமதிக்காலம் முடிவடைந்ததன் பின்னரும் நாட்டிலேயே தங்கியிருந்து, புகலிடம் கோருவதாகவும், பிரிட்டன் அரசாங்கம் இதனைப் பிரச்சினைக்குரிய விடயமாகக் கருதுவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எந்தெந்த நாடுகளின் பிரஜைகள் விசா அனுமதிக்காலம் முடிவடைந்ததன் பின்னரும் நாட்டில் தங்கியிருக்கிறார்கள் என்பது குறித்த தரவுகள் பிரிட்டன் உள்துறை அமைச்சினால் வெளியிடப்படாத போதிலும், பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பிரஜைகள் இம்மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.




# அரபுக் கல்லூரியில் முப்பெரும் விழா



(றிபாஸ்).

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியில் முப்பெரும் விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

கல்லூரியின் பணிப்பாளர் சபையின் தலைவர்

யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதி.

பேராசிரியர், கலாநிதி எம்.எஸ்.எம்.ஜலால்தீன்

விஷேட அதிதியாகக கலந்து கொண்டு முன்னாள் பணிப்பாளர் சவையின் ஆயுட்காலத் தலைவர் பேராசிரியர் மர்ஹூம் அச்சி எம் இஸ்ஹாக் ஞாபகார்த்த உரையினையும், அவரது ரவாழ்க்கைப் பயணம் என்ற நூலினையும் வெளியிட்டு வைத்தார்.

அதனை தொடர்ந்து இரண்டாவது அங்கமாக கல்லூரியின் அதிபர்



அஷ்ஷெய்க் ஏ.எல்.எம்.அஷ்ரப் தலைமையில் கல்லூரிக்கு பங்களிப்பு செய்தவர்களுக்கான துஆப் பிரார்த்தனையும்,

பட்டம் பெரும் உலமாக்கள் மற்றும் காபீழ்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது

பிரதம பேச்சாளராக அல்-ஹாபிழ், அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.லபீர் (முர்ஷி) உட்பட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள், உஸ்தாதுமார்கள், பகுதி நேர ஆசிரியர்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள், மூத்த உலமாக்கள் கலாச்சார உத்தியோகத்தர்கள்,

வலயக்கல்விப்பணிப்பாளர், பள்ளிவாசல் தலைவர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.05.2025இல் வெளியிடப்பெற்றது